Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 41/2024 PW-4**

Name : பொன்னுசாமி
Father / Husband name : சொக்கலிங்கம்
Village : சாரம்
Age : 53
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 08.10.2025

Accused 1, 2 present.

**முதல் விசாரணை**

நான் தற்போது விவசாயம் வேலை செய்கிறேன். அ.சா. 1 மஞ்சுளா, அ.சா.2 பார்த்திபன் ஆகியோர்களை எனக்கு தெரியும், எனது ஊர்க்காரர்கள். ஆஜர் எதிரிகளும் எனது ஊர்க்காரர்கள். 03.03.2024 அன்று இரவு 8, 9 மணியளவில் அ.சா.1 எனக்கு போன் செய்து அ.சா.1க்கும் எதிரிகளுக்கும் சண்டை நடப்பதாக சொல்லி என்னை அழைத்தார், நான் அ.சா.1 வீட்டிற்கு சென்று பார்த்தபோது அ.சா.1 ன் வீட்டிற்கு முன்பாக ரோட்டில் 1வது எதிரியும் அசா.1 ம் தெருதண்ணீர்க்குழாய் வாய்த்தகறாறு செய்துகொண்டிருந்தார்கள். அந்தயிடத்தில் 2வது எதிரி மற்றும் பார்த்திபன் ஆகியோர்கள் இருந்தார்கள். நான் சண்டையை மறித்துவிட்டேன். பின்னர் நான் வீட்டிற்கு வந்துவிட்டேன். போலிசார் வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள்.

**( அரசு தரப்பில் சாட்சியை பகுதியளவு பிறழ் சாட்சியாக அறிவித்து கு.வி செய்ய அனுமதி கேட்டதின் பெயரில் கு.வி செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது )**

முதல் விசாரணையில் சொன்ன தேதி நேரத்தில் எதிரிகள் அ.சா.1 யிடம் சண்டைபோட்டு 1வது எதிரி அ.சா.1 ஐ தகாத வார்த்தையால் திட்டி கீழே தள்ளி உயிர்நிலையில் மிதித்து, நெஞ்சில் குத்தி, கீழே கிடந்த உருட்டுக்கட்டையால் அ.சா.1 ன் இடது கை, இடது காலிலும் தாக்கினார் என்றும், அ.சா.1

பயந்துகொண்டு வீட்டிற்கு கதவை சாத்திக்கொண்டார் என்றும், எதிரிகள் விடாமல் அ.சா.1 ஐ தகாத வாத்தையால் திட்டி கொலை மிரட்டல் விடுத்தார் என்றும் சம்பவம் நான் நேரில் பார்த்தேன் என்றும் போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிக ளுக்கு பயந்து அரசு தரப்பு சாட்சியத்திலிருந்து பகுதியளவு விலகி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இல்லை.

**Sd/ M.Elavarasi,**
**Judicial Magistrate No.I, Tindivanam**

Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 41/2024 PW-5**

Name : செல்வம்
Father / Husband name : முத்துமாணிக்கம்
Village : சாரம்
Age : 53
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 08.10.2025

Accused 1, 2 present.

**முதல் விசாரணை**

நான் தற்போது விவசாய கூலி வேலை செய்துவருகிறேன். அ.சா.3 பாபு என்பவரை எனக்கு தெரியும், எனது ஊர்க்காரர். என்னிடம் காட்டப்படும் ஆவணமான பார்வை மகசரில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையது தான். 06.03.2024 அன்று பகல் 3 மணிக்கு சாரத்திலுள்ள இந்திரா நகர் வழியாக டீக்கடைக்கு செல்லும்போது ஒலக்கூர் போலிசார் வழக்கு சம்மந்தமாக படம் வரைந்து கையொப்பம் கேட்டார்கள், என்னுடன் அ.சா.3 ம் கையொப்பம் செய்தார். போலிசார் என்னை விசாரிக்கவில்லை. **பார்வை மகசரில் உள்ள சாட்சியின் கையொப்பம் மட்டும் அ.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.

**Sd/ M.Elavarasi,**
**Judicial Magistrate No.I, Tindivanam**